**தலைப்பு 165 – தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கொண்ட நிதிக்கூற்றுக்கள் முறையே 12 நாட்கள், 15 நாட்கள் மற்றும் 84 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 9.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் நடவடிக்கை ஆரம்பித்தல் தாமதமடைந்தமை மற்றும் தமிழ் மொழி பிரதியை மொழி பெயர்ப்பதிலுள்ள பிரச்சினைகளின் காரணமாக தாமதமடைந்திருந்தமை. |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் வைப்பு வருமானம் ரூபா 6,260,832 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய பெறுவனவுகளின் கீழும் வைப்பு வருமானம் ரூபா 6,209,570 ஆக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | ரூபா 6,209,570 தொகை தவறினால் அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் கைப்பற்றுதல் ரூபா 43,470,851 ஆக இருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அது ரூபா 43,000,000 ஆனமையின் காரணமாக ரூபா 470,851 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை | நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிய வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iii) | மீளாய்வாண்டில் முற்பண அறவிடல் ரூபா 7,014,545 ஆக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் அது ரூபா 229,470 ஆகக் காணப்பட்டமையின் காரணமாக ரூபா 6,785,075 தொகையான முற்பணப் பெறுவனவுகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய மொத்த முற்பணத்தை அறவிடல் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ளது. | குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முற்பணத்தைத் தீர்த்தல் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. |
| (iv) | நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பண செலுத்துதல்கள் ரூபா 3,028,162 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி கணனி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 3,648,146 ஆகப் பதியப்பட்டமையால் ரூபா 619,984 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஆண்டிற்குரிய மொத்த முற்பண செலுத்துதல்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ளது. | பணமாக வழங்கப்பட்ட முற்பணம் மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 393,376,805 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றிக்கொள்ளும் பெறுமதி ரூபா 408,307,856 ஆனமையால் ரூபா 14,931,051 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதி இனங்காணப்பட வேண்டியுள்ளது. | கணக்காய்வின் போது சுட்டிக்காண்பித்ததன் பிரகாரம் சரிசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணப் பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்கள் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சலில் காண்பிக்கப்படவில்லை. | முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட காசுப் பெறுவனவுகள் மற்றும் செலுத்துதல்கள் சகலதும் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியிருந்தமை. | கணக்காய்வின் போது சுட்டிக்காண்பித்ததன் பிரகாரம் சரிசெய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று, கட்டுநிதி இணக்கக்கூற்று மற்றும் நிதிச்செயலாற்றல் அறிக்கை என்பன அனுப்பப்பட்டுள்ளது. |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,655,233 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 12,670,780 தொகையான இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் வீடல்லாத கட்டிடத்தின் கீழ் கூட்டுமொத்தமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் வகுப்பு சரியாக இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 43,000,000 பெறுமதியான வாகனங்களைக் கொள்வனவு செய்தல் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அலுவலகக் கட்டிடமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் வகுப்பு சரியாக இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் மீதி 63,796,863 ஆக இருந்த போதிலும், திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் பெறுமதி பூச்சியமாகக் அறிக்கையிடப்பட்டிருந்தது. | திறைசேரி அச்சிடல் குறிப்பில் வேறுபாடுகளை இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டிருந்தமை மற்றும்கணக்குகளைத் தயாரித்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தனர். |

**(ஈ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு<br><br>2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் போன்றவற்றுக்கான பதிவேடு<br><br>நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக் கட்டளை பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 451 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் ஜீ.ஏ.எம்.83 படிவத்தின் படி கிடைக்கப்பெறுகின்ற காசோலைகள், காசுக் கட்டளைகளை பதிவதற்கு முடியுமான வகையில் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பிணைப் பதிவேடு<br>--------------------------<br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். | - மேற்படி - |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு<br>---------------------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அரசின் கட்டிடங்களில் சகல மின் துணைப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடு பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (v) | இழப்பு தொடர்பான பதிவேடு<br>--------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வருகின்ற படிவத்தின் பிரகாரமும் இழப்பு தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (vi) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு<br>-------------------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் சரியான முறையில் பரீட்சிக்கக்கூடிய வகையில் பொறுப்பு பதிவேட்டில் அப்பொறுப்புக்கள் குறிப்பிடப்பட வேண்டும். | - மேற்படி - |
| (vii) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்பு புத்தகம்<br>---------------------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 1647(ஈ) இன் பிரகாரம் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647 (ஈ) இன் பிரகாரம் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | - மேற்படி - |

(viii) வாகன நிரற்படுத்தல் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரற்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | - மேற்படி - |

(உ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் நிதி நிர்வாகத்திற்காக வினைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச்செல்லப்படுகின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் விளைவுத் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமை வினைத்திறனாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான திட்டமுறையொன்று உள்ளமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அந்தத் தேவை நிறைவேற்றப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**(ஊ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும்பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| நிதிப்பிரமாணம் 104(4) | 644,920 | பிரமாணத்தின் பிரகாரம் நட்ட இழப்புக்கள் ஏற்பட்ட திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 02 வாகனங்கள் தொடர்பாக உரிய அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். இதுவரையில் முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு மாற்றமடையாமை | | |
| 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 62,000 மற்றும் 12 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,517.76 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் எந்தப் | வர்த்தமானியின் மூலம் அமைச்சின் விடயப்பரப்பு மாற்றமடையும் போது உரிய செலவின | 2018 ஆம் ஆண்டின் போது சில சந்தர்ப்பங்களில் அந்த அமைச்சின் விடயப்பரப்பில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாடுமின்றி முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | விடயத்திற்காக ஏற்படும் நிதிஏற்பாட்டை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முடியாதிருந்தமை. |
| (ஆ) | மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை<br>--------------------------------------------------------- | | |
| (i) | 19 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 670.17 மில்லியன் கூட்டுத்தொகையான தேறிய நிதிஏற்பாட்டில் கூட்டமொத்தமாக ரூபா 40.13 மில்லியன் அளவில் பயன்படுத்தப்படாமையினால் மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 630.04 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தேறிய நிதிஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ii) | 11 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,025.75 மில்லியன் கூட்டுத்தொகையான தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 2,510.36 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால் மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 2,515.39 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 36 சதவீதம் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 திட்டமிடல்

------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திற்காகவும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். இது வரையில் முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டுள்ளது. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 15.3(உ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்துரைத்த பிரகாரம் அந்தந்த வருடங்களுக்குரிய செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது வரையில் முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டுள்ளது. |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு பணியகம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டு நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 24,876,534 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சு கட்டுப்பாட்டாளருக்கு அறிக்கையிடப்படவில்லை. | தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு பணியகத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களும் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டியுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது வரையில் முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு உள்ளகக் கணக்காய்வு அலகை தாபித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று அமுல்படுத்த வேண்டியிருந்தமை. | ஏற்றுக்கொள்கின்றோம். முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டிருந்தமை மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமுல்படுத்தப்பட்டமைக்கான தகவல்கள் கண்டறியப்படாதிருந்தமை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடமொன்றிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு வருடங்களுக்கும் உரிய குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்தமை | ஏற்றுக்கொள்கின்றோம். முன்னர் காணப்பட்ட தேசிய நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டிருந்தமை. |